# 60 வீதத்துக்கும் அதிக குடும்பங்களின் மாத வருமானம் குறைவடைவு
# 22 வீதமான குடும்பங்கள் கடனினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

## சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**கொழும்பு, ஜனவரி 01**

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் 60 சதவீதத்திற்கும் அதிகமான குடும்பங்களின் மாத வருமானம் குறைந்-துள்ளதாக சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் சமீபத்திய அறிக்கை தெரிவிக்கிறது.

இலங்கையில் குடும்பங்களின் மாதாந்த வருமானம் 60.5 வீதத்தால் குறைந்துள்ளதாகவும் குடும்பங்களின் மாதாந்த செலவுகள் 91 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் இந்த கணக்கெடுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 3.4 சதவீத குடும்பங்களில் மாத்திரமே வருமானம் அதிகரித்துள்ளது. 36.6 சதவீத குடும்பங்களின் வருமானம் மாறாமல் உள்ளது. வருமானம் குறைந்துள்ள 73.6 சதவீத குடும்பங்கள் அதற்கான எந்தவொரு மாற்று வழிகளும் இன்றி உள்ளனர்.

மேற்படி கணக்கெடுப்பின்படி, 6 சதவீதம் பேர் கூடுதல் வருமானம் அல்லது கூடுதல் வேலை வாய்ப்புகளை கண்டறிந்துள்ளனர். வருமானம் குறைந்த குடும்பங்கள் கடன் வாங்குதல், பொருட்களை அடகு வைத்தல், உணவு மற்றும் பணத்தை மற்றவர்களிடம் பெறல் என சீவியத்தை நடத்தி வருகின்றனர். அதற்கமைய, தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் இலங்கையில் 22 வீதமான குடும்பங்கள் கடனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடியால் 14.2 சதவீதம் பேர் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் ஆண்கள் ஆவர். 3 வயதுக்கும் 21 வயதுக்கும் இடைப்பட்ட பாடசாலை மாணவர்களில் 54.9 சதவீதம் பேர் கல்வி நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக, 53.2 சதவீதம் பேர் பாடசாலை உபகரணங்கள், காகிதாதிகள் ஆகியவற்றின் செலவைக் குறைத்துள்ளனர் அல்லது அவற்றை வாங்குவதைத் தவிர்த்துள்ளனர். 44 சதவீதம் பேர் புதிய சீருடைக்கான செலவை குறைத்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பின்னர் இலங்கையில் 29 வீதமான மக்கள் நோய்களுக்கு பலியாகியுள்ளதாகவும் அவர்களில் 7 வீதமானவர்கள் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக சிகிச்சை முறைகளை மாற்றிக் கொண்டுள்ளதாகவும், இவ்வாறு அந்த சிகிச்சை முறைகளை மாற்றிய நோயாளர்களில் 35.1 சதவீதம் பேர் சிகிச்சை நிலையங்களையும் மாற்றியுள்ளனர் எனவும் இந்த கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. மேலும், 33.9 சதவீதம் பேர் தங்கள் நோய் தீவிரமடைந்த பின்னரே மருந்துகளை பயன்படுத்தியதாகவும் தெரியவந்துள்ளது. சிகிச்சையை முறைகளை, சிகிச்சை நிலையங்களை மாற்றிய நோயாளிகளில் 81.7 சதவீதம் பேர் இந்த மாற்றத்திற்கான முக்கிய காரணம் போதிய பண வசதி இல்லாமையே என தெரிவித்துள்ளனர்.

2 ➤


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 11 திங்கட்கிழமை 01.01.2024 கதிர் 148





மாலைக்கதிர் வாசகர்கள், விளம்பரதாரர்கள்,
செய்தியாளர்கள் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

## எரிபொருள்களின் விலையில் மாற்றம்

இன்று அதிகாலை 5 மணி முதல் அமுலாகும் வகையில், இலங்கை கனிய வள கூட்டுத்தாபனத்தின் எரிபொருட்களின் சில்லறை விற்பனை விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை, 20 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, அதன் புதிய விலை 366 ரூபாவாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை, 2 ➤

## தனது பணியாளர்களுடன் புத்தாண்டில் கடமைகளை ஆரம்பித்தார் ஜனாதிபதி



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2024ஆம் ஆண்டு புத்தாண்டில் தனது கடமைகளை ஆரம்பித்து வைத்தன் பின்னர், இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் அமைச்சர்கள் மற்றும் அவரது ஊழியர்களைச் சந்தித்தார்.

ஜனாதிபதி புதிய வருட கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக, தேசியக் கொடியை ஏற்றிவைத்த பின்னர், நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த வீரர்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் ஜனாதிபதி அலுவலக ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரச சேவை உறுதிமொழியை எழுத்துக்கொண்டனர்.

தனது ஊழியர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்த ஜனாதிபதி, அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

சவால்களை சரியாகப் புரிந்துகொண்டு 2024 இல் நாட்டை வெற்றிப் பாதைக்கு கொண்டு செல்வதற்கு நம்பிக்கையான மனப்பான்மையுடனும் உறுதியுடனும் அனைவரும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்பட 2 ➤



## லிட்ரோ எரிவாயு விலை அதிகரிப்பு

லிட்ரோ உள்நாட்டு எரிவாயு எரிவாயுவின் விலை இன்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 12.5 கிலோ 685 ரூபாவால் அதிகரிப்பு - புதிய விலை 4,250 ரூபா.

5 கிலோ 276 ரூபாவால் அதிகரிப்பு - புதிய விலை 1,707 ரூபா. 2.3 கிலோகிராம் 127 ரூபாவால் அதிகரிப்பு - புதிய விலை 795 ரூபா. (அ)

## இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்தது

இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருமானம் 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு (2023) ஒக்டோபர் மாதத்தில் 20.6 வீதத்தால் 322.9 மில்லியன் டொலர்களாக குறைந்துள்ளது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. 2 ➤



## மைத்திரியின் சகா சஜித்துடன் சங்கமம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் த சில்வா, ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமித்துள்ளார். 2 ➤

## இலங்கை ஒரு சிங்கள, தமிழ், முஸ்லிம் நாடு என்ற இலக்கை நோக்கிப் பயமில்லாமல் பயணிப்போம்

### புத்தாண்டுச் செய்தியில் மனோ எம்.பி. திடசங்கற்பம்



புத்தம் புது வருட வாழ்த்துகள். இது வழமை போல வரும் புது வருடம் அல்ல. ஆகவே வாழ்த்துகளும், எதிர்பார்ப்புகளும் கூட வழமைபோல் இருந்திட முடியாது. “இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு”, என்ற இன்றைய அடையாளத்தில் இருந்து, “இலங்கை ஒரு சிங்கள, தமிழ், முஸ்லிம் நாடு”, “பௌத்த, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க நாடு” என்ற அடையாளங்களை நோக்கி பயணிப்போம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

இது ஒரு தேர்தல் வருடம். என்ன தேர்தல் என தெரியாது. ஜனாதிபதியே முடிவெடுக்க முடியாமல் தடுமாறுகிறார். ஆகவே எதையும் உறுதியாக நம்பாதீர்கள். எல்லாமே ஊகங்கள்தான். ஆனால், இன்றைய நெருக்கடியில் இருந்து மீள, ஒரு புது அரசாங்கத்தை கொண்டுவரக்கூடிய புது வருடம் இது. அது உண்மை.

“அரகல” என்ற கிளர்ச்சிக்கு பிறகு நாட்டில் ஊழலில் ஈடுபடும் திருடர்களை அரசியலில் இருந்து நிரந்தரமாக விரட்டும் கொள்கை மேலோங்கி இருக்கும் காலம் இதுவாகும். இரண்டு கரங்களையும் உயர்த்தி நான் இந்த கொள்கையை ஆதரிக்கிறேன். ஏனென்றால் எனக்கு திருட்டு பிடிக்காது. திருடவும் தெரியாது. 2 ➤

# சுற்றுலா செல்வோர் நதிகளில் இறங்கவேண்டாம்! நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தல்

தற்போது பரவலாக பெய்து வரும் மழை காரணமாக, நாட்டின் ஒவ்வொரு நீர்த்தேக்கமும் நிரம்பியுள்ளமையினால் சுற்றுலா செல்வோர் மற்றும் ஏனைய நபர்களும் அந்நீரோட்டங்களில் இறங்குவதை (குளிப்பதையோ, படகு செலுத்துவதையோ) தவிர்க்குமாறு நீர்ப்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர் பி.எஸ். சுகீஸ்வர அறிவுறுத்தியுள்ளார்.

மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் நீர்த்தேக்கங்களில் 100%, நீர்ப்பாசன நீர்த்தேக்கங்களில் 90மூ மற்றும் மகாவலி அதிகாரசபையின் கீழுள்ள நீர்த்தேக்கங்களில் 95% என நீரில் நிரம்பியுள்ளன எனவும் இந்நிலைமை மின்சாரம் மற்றும் விவசாயத்திற்கு நல்லது எனவும் அவர் தெரிவித்துள்ளார் .

நீர்ப்பாசன திணைக்களத்திற்குரிய 73 நீர்த்தேக்கங்களுள் 45 நீர்த்தேக்கங்களில் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்ட அவர், விசேடமாக மாணிக்க கங்கை, கிரிந்திஓய உட்பட பல நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் அதிகரித்தருப்பதால் இவற்றோடு சம்பந்தப்பட்ட நதிகளை பயன்படுத்த வேண்டாம் என நீர்ப்பாசன திணைக்களம் மக்களிடம் கேட்டுக் கொள்வதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரெத-04)

# தேசிய நீர் வழங்கல் சபை நட்டத்தின் மத்தியிலும் மில்லியன் கணக்கில் ஊழியருக்கு கொடுப்பனவு

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு 03 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ள நிலையில், பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் 2022 ஆம் ஆண்டில் போனஸ் கொடுப்பனவிற்கு பதிலாக இலாப கொடுப்பனவாக 269 மில்லியன் ரூபாவை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வழங்கியுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

2021 நவம்பர் 17 ஆம் திகதி அரச தொழில் முயற்சிகள் திணைக்களம் வெளியிட்ட செயல்பாட்டுக் கையேட்டின்படி, இலாப விபரங்களை ஒருங்கிணைந்த நிதியத்திற்கு அனுப்பிய பிறகே போனஸ் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டும் என்பது கணக்காய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

ஆனால், இதற்கு மாறாக தேசிய நீர் வழங்கல் சபைக்கு 03 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ள நிலையில் பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் லாப கொடுப்பனவாக மேற்படி கொடுப்பனவை வழங்கியுள்ளதாக தேசிய கணக்காய்வு திணைக்களம் வெளியிட்டுள்ள வருடாந்த கணக்காய்வு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரெத-03)

## காங்கேசன்துறை பிராந்திய பொலிசாரின் 2024 புத்தாண்டுச் சத்தியப்பிரமாண நிகழ்வு



2024 புத்தாண்டில் காங்கேசன்துறை பிராந்திய பொலிசாரின் சத்தியப்பிரமாண நிகழ்வு காங்கேசன்துறையில் உள்ள பொலிஸ் மைதானத்தில் இன்று நடைபெற்றது.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரட்ண தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் சந்தண கமகே மற்றும் காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் பொறுப்பதிகாரிகள், பொலிஸார் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (01)

## மைத்திரியின் சகா சஜித்துடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை இன்று காலை சந்தித்து கலந்துரையாடிய பின்னர், கட்சி உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பலாங்கொடை தொகுதி பிரதான அமைப்பாளராகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## இலங்கையின் ஆடை ஏற்றுமதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் ஆடை ஏற்றுமதி மூலம் 406.8 மில்லியன் டொலர் வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. மேலும், நிறைவடைந்த 2023 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஒக்டோபர் வரையிலான 10 மாத காலப்பகுதியில், ஆடைகளின் ஏற்றுமதி வருமானம் 2022 ஆம் ஆண்டின் காலகட்டத்துடன் ஒப்பிடும்போது. 3668.4 மில்லியன் டொலர்களாக குறைந்துள்ளதாகவும் மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2022 ஆம் ஆண்டின் போது, ஆடை ஏற்றுமதி மூலம் 4622.7 மில்லியன் டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய இராச்சியம் ஆகிய முக்கிய ஆடை சந்தைகளுக்கான ஆடை ஏற்றுமதியில் ஏற்பட்ட சரிவு காரணமாகவே இவ்வாறு ஆடை ஏற்றுமதி வருமானம் குறைந்திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ரெத -02)

## இலங்கை ஒரு சிங்கள, தமிழ், .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், அது மட்டும் போதாது. இந்த நாட்டில் இனவாதத்தை முழுமையாக துடைத்து எறிய வேண்டும். ஊழலை ஒழிப்பதை விட இது கஷ்டமானது. அது எனக்கு தெரியும்.

ஆனால், நான் ஒரு விக்கிரமாதித்தன். மனம் தளரவே மாட்டேன். மீண்டும் மீண்டும், முயற்சிப்பேன். வாருங்கள், நாம் எல்லோரும் முயற்சிப்போம். “இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு”, என்ற அடையாளத்தில் இருந்து, “இலங்கை ஒரு சிங்கள, தமிழ், முஸ்லிம் நாடு”, “பௌத்த, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க நாடு” என்ற அடையாளங்களை நோக்கி பயணிப்போம். அனைவருக்கும் வாழ்த்துகள். - என்றும் தனது புத்தாண்டுச் செய்தியில் மனோ கணேசன் எம்.பி குறிப்பிட்டுள்ளார். (அ)

## தனது பணியாளர்களுடன் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்கள் மற்றும் ஊழியர்களுடன் தேநீர் விருந்துபசாரத்தில் கலந்து கொண்டார்.

அமைச்சர் பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஷெஹான் சேமசிங்க, கனக ஹேரத், நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, பொருளாதார விவகாரங்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, ஜனாதிபதியின் நாடாளுமன்ற விவகார ஆலோசகர் ஆமாரசிங்க, ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய மற்றும் ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## எரிபொருள்களின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

38 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 464 ரூபாவாகும்.

இதேவேளை, ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை, 29 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு அதன் புதிய விலை 358 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 41 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 475 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை, 11 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 236 ரூபாவாகும் என இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (அ)

## 60 வீதத்துக்கும் அதிக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலால் இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டதாகவும், கொவிட் தொற்றுக்கு பின்னர் நெருக்கடி மிகவும் கடுமையானதாகவும், அதனை எதிர்கொள்ள மக்கள் பல சவால்களை எதிர்கொண்டு வருவதாகவும் சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ரெத-01)

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
maalaikkathir@gmail.com

**செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட**
காலைக்கதிர் TV YouTube தளம்

முல்லை ஒய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறைமிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் 2024 ஆம் ஆண்டின் செயற்பாடுகள் ஆரம்பம்

(சியாத் .எம்.இஸ்மாயில்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை புதிய ஆண்டின் கடமைச் செயற்பாடுகள் வைத்திய அத்தியட்சகர் டொக்டர். ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் தலைமையில் வைபவ ரீதியாக தேசிய கொடி ஏற்றி வைக்கப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது ராணுவ வீரர்கள் உள்ளிட்ட நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த அனைவரையும் நினைவுகூர்ந்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அரச சேவைக்கான உறுதி மொழி சத்திய பிரமாணம் மேற்கொள்ளப்பட்டது

"வலுவான எதிர்காலத்துக்கான தொடக்கவுரை" என்ற தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்றதுடன், தற்போதைய சவால்களை வெற்றி கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரச கொள்கைகள் மற்றும் வேலைத் திட்டங்கள் பற்றியும் அந்த குறிக்கோள்களை அடைவதற்கு அரச ஊழியர்களின் பங்களிப்பு பற்றியும் வைத்திய அத்தியட்சகரினால் உரை திகழ்த்தப்பட்டது.

இந் நிகழ்வில், வைத்தியசாலை நிபுணர்கள், வைத்தியர்கள், அனைத்து தர சுகாதார சேவை உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# கல்முனை மாநகர சபையில் டிஜிட்டல் முகப்பு அலுவலகம்



(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையில் பொதுமக்களுக்கான சேவைகளை ஒரே கூரையின் கீழ் வழங்கும் பொருட்டு டிஜிட்டல் வசதிகளுடன் அமைக்கப்பட்ட முகப்பு அலுவலகம் இன்று திறந்து வைக்கப்பட்டது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸி, கணக்காளர் கே.எம்.றியாஸ், கால்நடை வைத்திய அதிகாரி என்.ஏ. வட்டப்பொல, வேலைகள் அத்தியட்சகர் வி. உதயகுமரன், உள்ளூராட்சி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம். நௌசாத், நிதி உதவியாளர் திருமதி எஸ். யோகராஜா, நிதிப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.ஏ.பாஸித், ஏனைய பிரிவுகளின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களான என். பரமேஸ்வர வர்மன், யூ.எம். இஸ்ஹாக், எம்.ஏ. அஹத் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது பொதுமக்களுக்கான சேவை வழுங்கல் பணிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கல்முனை மாநகர சபையின் சேவைகளை பெற்றுக் கொள்ள வருகை தருகின்ற பொது மக்கள் இந்த முகப்பு அலுவலகத்தில் உள்ள கரும பீடங்களில் உரிய ஆவணங்களுடன் சோலை வரி மற்றும் சேவைக் கட்டணங்களை செலுத்திவிட்டு, இங்கு இருந்தவாறே தமக்கான சேவைகளை இலகுவாக நிறைவு செய்து கொண்டு செல்ல முடியும், என மாநகர ஆணையாளர் இதன்போது குறிப்பிட்டார்.

இதன் மூலம் கடந்த காலங்களில் சேவைகளை பெற்றுக் கொள்வதில் நிலவிய கால தாமதங்கள் மற்றும் தேவையற்ற அசௌகரியங்கள் முற்றாக தவிர்க்கப்படுவதுடன் தம்மால் செலுத்தப்படுகின்ற வரிகள் மற்றும் கட்டணத் தொகைகளுக்கு முழுமையான உத்தரவாதமளிக்கப்படுகிறது, எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நீடித்து நிலைத்திருக்கும் நிர்மாணப்பணிகள் அம்பாறை மாவட்ட மட்ட கலந்துரையாடல்

(சியாத்.எம். இஸ்மாயில் )

அம்பாறை மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்டு வரும் நீடித்து நிலைத்திருக்கும் நிர்மாணப்பணிகள் தொடர்பான மாவட்ட மட்ட கலந்துரையாடல் அக்கரைப்பற்று சுவாட் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பானது நீடித்து நிலைத்திருக்கும் நிர்மாணப்பணி குழுவும் இணைந்து சுவாட் அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் கே.பிரேமலதனின் ஒருங்கிணைப்பில் ஸ்தாபகர் எஸ். செந்தூராசா தலைமையில் மேற்படி நிகழ்வு ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது.

அம்பாறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சகல நிர்மாணப் பணிகளும் வலுவான பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பி, மக்களுக்கு சிறந்த நல்வாழ்வை உருவாக்கும் நோக்குடன் வினைத்திறனான சமூக செயற்பாட்டுக் குழுவொன்றை மாவட்டத்தில் உருவாக்கி, அதனூடாக மக்களின் தேவைகள், விருப்புக்களை கருத்திற்கொண்டு இந்நிர்மாணப்பணிகளின் பொதுப் பணச் செலவுகள் சரியாக முன்னெடுக்கப் படுவதை உறுதி செய்வதற்காக, செயற்படுத்துவது தொடர்பில் நீடித்து நிலைத்திருக்கும் நிர்மாணப்பணிகள் குழுவின் இணைப்பாளர் சமந்த விக்கிரம விளக்கமளித்தார்.



இந்நிகழ்வில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், கல்விமான்கள், ஓய்வுபெற்ற அரச அதிகாரிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், பல்துறை சார்ந்த அரச நிறுவன அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், சமூக மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், இளையோர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இதன் போது இச்செயற்றிட்டத்திற்கான மாவட்ட மட்ட குழு தெரிவு செய்யப்பட்டதுடன் இதன் தலைவராக தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அனூசியா சேனாதிராஜா தெரிவு செய்யப்பட்டதுடன் ஈற்றில் ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

யாழ் முற்றம்
Face of Jaffna
கறுவா, சந்தனம், கராம்பு, கோப்பி, கொக்கோ, மிளகு ஆகிய மரக்கன்றுகள் விற்பனைக்கு உள்ளன.
076 443 8620
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்





# அதிகமான ராணுவ உளவுச் செயற்கைக்கோள்கள் அணு ஆயுதங்கள்- நவீன ஆளில்லா விமானங்கள்

## முனைப்புக் காட்ட வடகொரிய அதிபர் இலக்கு



2024 ஆம் ஆண்டில் அதிகமான ராணுவ உளவு செயற்கைக்கோள்களைச் செலுத்தவும், அணு ஆயுதங்கள், நவீன ஆளில்லா விமானங்களை (ட்ரோன்) தயாரிக்கவும் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இலக்கு நிர்ணயித்திருப்பதாக அந்நாட்டு அரசு ஊடகம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது.

2024 ஆம் ஆண்டுக்கான அரசின் இலக்குகளைத் தீர்மானிக்க, 5 நாள்கள் நடைபெற்ற ஆளும் தொழிலாளர் கட்சியின் கூட்டம் கடந்த சனிக்கிழமை நிறைவடைந்தது.

இந்தக் கூட்டத்தில் பேசிய அதிபர் கிம் ஜோங் உன், 'வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் 2023 இல் அதிகரித்துள்ளது. இதனால், கொரிய தீபகற்பத்தில் அணு ஆயுதப் போர் ஏற்படுவதற்கான சூழல் நிலவுகிறது.

எதிரி நாடுகளின் நடவடிக்கைகளை முறியடிக்க சிறந்த முறையில் நமது ராணுவம் தயாராக இருக்க வேண்டும். 2024 இல் 3 க்கும் அதிகமான ராணுவ உளவு செயற்கைக்கோள்களைச் செலுத்த வேண்டும். அணு ஆயுதங்களை அதிக அளவில் தயாரிக்கத் தேவையான கட்டமைப்பை நிறுவ வேண்டும். நீர்மூழ்கிக் கப்பல்களின் திறன்களை அதிகரிக்கவும், ராணுவ ட்ரோன்கள் போன்ற நவீன ஆளில்லா தாக்குதல் கருவிகளை மேம்படுத்தவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

வடகொரியா மீதான பொருளாதாரத் தடைகளை ரத்து செய்வதில் 2019 இல் ஏற்பட்ட முரண்பாட்டால், அப்போதைய அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இடையேயான நட்புறவு முறிவடைந்தது.

இதையடுத்து, அணு ஆயுதங்களை நவீனமயமாக்குவதில் அதிபர் கிம் ஜோங் உன் கவனம் செலுத்தி வருகிறார். அண்மைக்காலமாக சீனா, ரஷ்யாவுடன் தனது நட்புறவை வடகொரியா அதிகரித்துள்ளது. ரஷ்யாவுக்குத் தேவையான ராணுவத் தளவாடங்களை வழங்கி, இதற்குப் பிரதிபலனாக ரஷ்யாவின் உயர் தொழில்நுட்பங்களை தனது நாட்டு ராணுவத்துக்காக வடகொரியா பெற்று வருகிறது என அமெரிக்காவும், தென் கொரியாவும் குற்றஞ்சாட்டி வருகின்றன. நாட்டின் முதல் ராணுவ உளவு செயற்கைக்கோளை கடந்த நவம்பரில் வடகொரியா விண்ணில் செலுத்தியது குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள்! சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது



ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டதை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் மேற்குப் பகுதியில் இன்று பகல் ரிச்டர் அளவில் 3.5 முதல் 7.6 வரை அடுத்தடுத்து 10 க்கும் அதிக முறை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக ஜப்பான் நிலநடுக்கவியல் மையம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து வீடுகள் குலுங்கியதால் மக்கள் அச்சத்துடன் வீட்டைவிட்டு வெளியேறினார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோ உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட நகரங்களில் சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் உயிரிழப்புகள் குறித்து இதுவரை எந்த அதிகாரப்பூர்வ தகவலும் வெளியாகவில்லை.

ஹோன் அருகே 13 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதால் இஷிகாவா, நிகாடா, டோயாமா மற்றும் யமகட்டா பகுதிகளில் உள்ள கடலில் 5 மீற்றர் உயரத்துக்கு அலைகள் எழும் என்று சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுனாமி எச்சரிக்கையைத் தொடர்ந்து, கடலோரப் பகுதிகளில் உள்ள மக்கள் வேகமாக வெளியேற அந்நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளது. (04)

## இந்தியாவில் தொடர்ந்து அதிகரிக்கிறது கொரோனாவின் புதிய திரிபு - ஜெஎன்.1

இந்தியாவில் கொரோனாவின் புதிய மாறுபாட்டின் பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இன்று காலை வரையிலான 24 மணி நேரத்தில் 636 பேருக்கு இத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா பாதிப்பு காரணமாக கேரளத்தில் 2, தமிழகத்தில் ஒருவர் என மேலும் 3 பேர் உயிரிழந்துள்ளதாக, இந்திய மத்திய சுகாதார அமைச்சக தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கடந்த மே மாதம் 19 ஆம் திகதி கொரோனா தினசரி பாதிப்பு 865 ஆக பதிவாகி இருந்தது. அதன் பிறகு பாதிப்பு குறையத் தொடங்கியது. புதிதாக பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை இரட்டை இலக்கத்தில்தான் பதிவாகி வந்தது.

இச்சூழலில், உலகின் பல்வேறு நாடுகளில் கொரோனாவின் புதிய திரிபான 'ஜெஎன்.1' தொற்று பரவி வருகிறது. இந்தியாவிலும் இப்புதிய வகை கொரோனா கண்டறியப்பட்டுள்ளது.

புதிய வகை கொரோனா பரவல் மற்றும் குளிர்காலத்தின் எதிரொலியாக, இந்தியாவில் கடந்த மாத தொடக்கத்தில் இருந்து கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரித்து வருகிறது. கடந்த 228 நாள்களில் இல்லாத அளவில், தற்போது தினசரி பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன. கொரோனாவுக்கு சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 4,394 ஆக உயர்ந்துள்ளது.

2020 ஆம் ஆண்டு தொடக்கத்தில் கொரோனா பரவத் தொடங்கியதுமுதல் இதுவரை இந்தியாவில் பாதிப்பு உறுதி செய்யப்பட்டோர் எண்ணிக்கை 4.5 கோடி யாகும். 5.3 லட்சத்துக்கும் மேற்பட்ட இறப்புகளும் அங்கு பதிவாகியுள்ளன. (04)



# தென்கிழக்குப் பல்கலையில் 2024 கடமைகளை ஆரம்பிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு இன்று!



(நூருல் ஹுதா உமர்)

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைய 2024 ஆம் ஆண்டின் அரச கடமைகளை ஆரம்பிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு இன்று தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரதான கேட்போர் கூடத்தில், உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் இடம்பெற்றது.

உபவேந்தரால் தேசியக் கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் பல்கலைக்கழக பாதுகாப்பு பிரிவின் அணிவகுப்பும் இடம்பெற்றது.

பின்னர் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் அவர்களால் அரசாங்க சேவை சாத்தியப்பிரமாண உறுதிமொழி தமிழிலும் பதில் நிதியாளர் சீ.எம்.வன்னியாராச்சி அவர்களால் சிங்களத்திலும் வாசிக்கப்பட்ட அதேவேளை அனைத்து உத்தியோகத்தர்களும் குறித்த உறுதிமொழியைக் கூறி கடமைகளை பொறுப்பேற்றனர்.

நாட்டுக்காக உயிர் நீத்த முப்படையினருக்காக இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கு உரையாற்றிய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், எங்களால் உறுதிகொள்ளப்பட்ட சத்தியப்பிரமாணத்துக்கு அமைவாக எங்களது சேவையைப் பெறுவோர் பயனடைய வேண்டும். அதற்காக நாங்கள் அனைவரும் எங்களது கடமைகளை சரிவர ஆற்ற வேண்டும், என்று தெரிவித்தார்.

“வலுவான எதிர்காலத்துக்கான தொடக்கவுரை” என்ற கருப்பொருளை முன்னிறுத்தி, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை மெய்ப்படுத்தி, மக்கள் மையப் பொருளாதாரமொன்றை உருவாக்குவதற்கு வினைத்திறன்மிக்க மனித வளத்தினைக் கொண்ட அரச நிருவாகத்தின் பங்காளராகிய நாங்கள்,

அதி மேன்மைக்குரிய ஜனாதிபதி அவர்களின் நாட்டைக் கட்டியெழுப்பும் புதிய யுக்திகளுக்கு அமைவாக பல்கலைக்கழகங்கள் ஆற்றவேண்டிய பங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உச்ச அளவில் ஆற்ற அனைவரும் முன்வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நிகழ்வின்போது பதில் நிதியாளர் சீ.எம்.வன்னியாராச்சி, நூலகர் எம்.எம்.றிபாயுடீன் பீடாதிபதிகள் பேராசிரியர்கள் திணைக்களங்களின் தலைவர்கள் சிரேஷ்ட, கனிஷ்ட விரிவுரையாளர்கள் நிருவாக உத்தியோகத்தர்கள் கல்விசாரா உத்தியோகத்தர்கள் என பலரும் பங்குகொண்டிருந்தனர்.

# தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் 2024ஆம் ஆண்டு கடமைகள் ஆரம்பம்



(ஹஸ்பர்)

2024 ஆம் ஆண்டின் புதுவருட நிகழ்வும் புதிய கடமைகளை ஆரம்பித்தல் நிகழ்வும் தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இன்று இடம்பெற்றன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் இவ் வருடத்திற்கான கடமை ஆரம்பிப்பு தொடர்பான சத்தியப்பிரமாண நிகழ்வும் இடம் பெற்றது.

பிரதேச செயலாளரினால் தேசியக் கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதமும் இசைக்கப்பட்டது. சர்வமத தலைவர்களின் நிகழ்வுகளும் இதன்போது இடம் பெற்றதுடன் யுத்தத்தில் உயிர்நீத்த படை வீரர்களுக்காக இரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதில் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் உட்பட சக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.




# நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் 2024 ஆம் ஆண்டிற்கான அலுவலக முதல் நாள் கடமைகள்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் புதிய ஆண்டின் (2024) அரசாங்க சேவைச் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

தாய் நாட்டின் தேசியக் கொடி பிரதேச செயலாளரினால் ஏற்றி வைக்கப்பட்டதுடன்,

“வலுவான எதிர்காலத்துக்கான தொடக்கவுரை” என்ற தொனிப் பொருளின் கீழ், தற்போதைய சர்வதேச போக்குக்கு அமைவாக புதிய பொருளாதாரச் செயன்முறையொன்றுக்கான அடிப்படையை வழங்கி, ஜனாதிபதியால் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு முன்வைக்கப்படுகின்ற விடயங்களின் வாயிலாக, எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு, அரச சேவையை வெற்றிகரமாக முன்கொண்டு செல்ல வேண்டியதன் அவசியம் குறித்து பிரதேச செயலாளரினால் உரை நிகழ்த்தப்பட்டது.

நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த படைவீரர்களுக்கும் ஏனையவர்களுக்குமாக 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அலுவலக பிரதான மண்டபத்தில் 2023ம் ஆண்டின் அடைவுகள் காட்சிப்படுத்தப்பட்டு, 2024 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் உத்தியோகத்தர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன், கணக்காளர் கே.எம்.றிஸ்வி யஹ்ஸர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. கிருபை ராஜா திலகராணி, நிர்வாக உத்தியோகத்தர் கே.யோகஸ்வரன், சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எஸ்.சிவம், மேலதிக மாவட்ட பதிவாளர் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ் மாநகரசபையின் பவளவிழா



யாழ் மாநகரசபையின் 75 ஆவது ஆண்டு நிறைவின் பவளவிழா இன்று யாழ் மாநகரசபையின் முன்றலில் மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கடந்த 75 ஆண்டுகளில் யாழ் மாநகரசபையில் பணியாற்றிய 28 கௌரவ முதல்வர்கள்,

17ஆணையாளர்களில் தற்போது வாழ்ந்து வரும் 4 மாநகரசபை முதல்வர்கள், 6 ஆணையாளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

திரு.செல்லன் கந்தயன், திருமதி ப.யோகேஸ்வரி பற்குணராஜா, இமானுவேல் ஆர்னல்ட், சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஆகியோரும், சமகாலத்தில் ஆணையாளராக கடமைபுரிந்த திரு. சி.வி.கே.சிவஞானம், வே.பொ.பாலசிங்கம், பொ.வாகீசன் ஆகியோரும் நினைவு விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் யாழ் மாநகர சபை பிரதி ஆணையாளர் வே.ஆயகுலன், செயலாளர் த.தயாளன், பிரதம கணக்காளர் திருமதி.ம.வசந்தமாலா உள்ளிட்ட மாநகரசபை பதவிநிலை அதிகாரிகள், சுகாதாரப் பணியாளர்கள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (01)

## இன்று சம்மாந்துறையில் புத்தாண்டு அலுவலகக் கடமை ஆரம்ப நிகழ்வு



(வி.ரி.சகாதேவராஜா)

புத்தாண்டில் அரச கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையில் இன்று வலயக்கல்விப் பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானா தலைமையில் நடைபெற்றது.

முதலில் தேசிய கொடி ஏற்றப்பட்டது. பின்னர் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அடுத்து நாட்டுக்காக உயிர்நீத்த அனைவருக்கும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது .

பின்பு அலுவலர்களுக்கான சத்தியபிரமாண உறுதி உரையை நிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர் பி. எம்.யாசீர் அரபாத் நிகழ்த்தினார் .

அதை தொடர்ந்து, "வலுவான எதிர்காலத்திற்கான தொடக்க உரை" என்ற மகுடத்தின் கீழ் பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானா உரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வை நெறிப்படுத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா தொகுத்து வழங்கினார். கொட்டு மழைக்கு மத்தியிலும் இந்த நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனை கடற்றொழில் திணைக்களம் 2024 ஆம் ஆண்டுக் கடமைகள் ஆரம்பம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான கடமைகள் இன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கல்முனை மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தில் 2024 ஆம் ஆண்டுக்குரிய கடமைகளை ஆரம்பிப்பதற்கான சத்தியப் பிரமாணத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் ஈடுபட்டனர்.






## 85 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் சிக்கின

நாட்டில் யுக்திய ஒப்பரேஷன் ஆரம்பிக்கப்பட்டு 14 நாள்களுக்குள் 85 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான போதைப்பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், பாதாளக் குழு உறுப்பினர்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரிகளிடமிருந்து 55 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான சொத்துகளும், வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன .

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஆலோசனைக் கமைய கடந்த 17 ஆம் திகதி யுக்திய ஒப்பரேஷன் ஆரம்பமானது. நேற்று 15 ஆவது நாளாகவும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக் கப்பட்டுவரும் யுக்திய ஒப்பரேஷன் நடவடிக்கையின்கீழ் 14 நாள்களுக் குள் 20 ஆயிரத்து 797 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஆயிரத்து 18 பேர் தடுப் புக் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப் பட்டு வருகின்றனர். 189 பேர் தொடர் பில் சொத்து சம்பந்தமான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

போதைப்பொருளுக்கு அடிமை யான ஆயிரத்து 298 பேர் புனர்வாழ் வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

டிசம்பர் 17 முதல் டிசம்பர் 14 நாட்களுக்குள்11 கிலோ 600 கிராம் ஹெரோயினும், 8 கிலோ 378 கிராம் ஐஸ் போதைப்பொருளும், 297 கிலோ கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளன. 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட கஞ்சா செடிகளும் மீட்கப்பட்டுள்ளன. (அ)

## வவுனியாவில் எலிக்காய்ச்சலால் இளைஞர் ஒருவர் பரிதாப மரணம்

வவுனியாவில் எலிக்காய்ச்சல் காரணமாக இளைஞர் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த இளைஞருக்கு சில தினங்களாகக் காய்ச்சல் இருந்துள்ளது. இதையடுத்து செட்டிகுளம் பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக அங்கிருந்து வவுனியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். இதன்பின் சட்ட வைத்திய அதி காரியால் மேற்கொள் ளப்பட்ட உடற்கூற்றுப்பரிசோதனையில் மேற்படி இளைஞர் எலிக்காய்ச்சல் காரண மாக மரணமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

செட்டிகுளம், முகத்தான்குளத்தை சேர்ந்த பிரசங்கர் என்ற 22 வயது இளைஞரே இவ்வாறு மரணமடைந் தவராவார். (அ)

## பாரவூர்தி விபத்தில் இருவர் மரணம்

கட்டுவன - ஊருபொக்க வீதியில் பாரவூர்தி ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த இரண்டு பேர் உயிரிழந்தனர்.

அத்துடன், இந்த விபத்தில் மேலும் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த பார வூர்தி ஊருபொக்க - ருக்மல்பிட்டிய பகுதியில் வீதியை விட்டு விலகி மர மொன்றில் மோதிய நிலையிலே இந்த விபத்து நேர்ந்துள்ளது. இந்தநிலையில், விபத்தில் படுகாய மடைந்த நான்கு பேரும் கட்டுவன வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி பாரவூர்தியின் சாரதி உயிரிழந்தார்.


NIPPON PAINT
A MEMBER OF THE NIPSEA GROUP
Inspired by you
பிறக்கும் புத்தாண்டு மகிழ்ச்சியும், சௌபாக்கியமும், உற்சாகமான தருணங்களுடனும் உங்கள் வாழ்வினை வர்ணமயமாக்கட்டும்!
நிப்போன் பெயிண்ட் இன் மகிழ்ச்சியான, வர்ணங்கள் நிறைந்த இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
2024
Vinyl Silk
Asia Pacific No.1
NIPPON PAINT LANKA (PVT) LTD.
No. 69A, Buthgamuwa Road, Rajagiriya, Sri Lanka.
Telephone: +94 11 4 600400. Fax: +94 11 4 600409
www.nipponpaint.lk | Info@nipponpaint.com.lk
SELLEYS
IF IT'S SELLEYS IT WORKS


THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH
JITF 2024
14TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR 2024
JANUARY
19 | 20 | 21
MUTTRAWELI GROUND
(NEXT TO JAFFNA FORT)
10.00 AM - 8.00 PM
இனிய
புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்
PLATINUM SPONSOR
DIMO
GOLD SPONSORS
NIPPON CEMENT
MEDIA SPONSORS
Capital
ORGANIZED BY
LECS LANKA EXHIBITION
IN ASSOCIATION WITH
CCTY
SILVER SPONSORS
Anchor
SOORYA
Hayleys Solar
PHOENIX
Sera
Imalka: +94 77 1093792 | imalka@saexhibitions.com | www.jitf.lk


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk